



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் வசிக்கின்ற தெலுங்கானா மக்களின் நலச் சங்க பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார். உடன் பகுதி கழகச் செயலாளர்கள் எஸ் முரளி ,இரா நரேந்திரன், அபரஞ்சி, எம். இப்ராஹிம் கனி,எஸ்.ஹரிக்குமார் மற்றும் தெலுங்கானா மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் : தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தேர்தல் பரப்புரைப் பயணம் - இன்று தொடங்குகிறார்!



**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கி.வீரமணி அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பரப்புரைப் பயணம் வருமாறு:–**

| நாள் | நேரம் | தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | வேட்பாளர் |
|---|---|---|---|---|
| 06.04.2026 – திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஆலங்குளம்<br>திருநெல்வேலி | ஆலங்குளம்<br>திருநெல்வேலி | முனைவர் **பால்.மனோஜ் பாண்டியன்,** திமுக<br>**சு.சுப்பிரமணியன்,** திமுக |
| 07.04.2026 – செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | விருதுநகர்<br>மதுரை வடக்கு | விருதுநகர்<br>மதுரை வடக்கு | **விஜய பிரபாகர்,** தேமுதிக<br>**கோ.தளபதி,** திமுக |
| 08.04.2026 - புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கம்பம்<br>போடிநாயக்கனூர் | கம்பம்<br>போடிநாயக்கனூர் | **நா.இராமகிருஷ்ணன்,** திமுக<br>**ஓ.பன்னீர்செல்வம்,** திமுக |
| 09.04.2026 - வியாழன் | காலை 9 மணி<br>மாலை 6 மணி<br>இரவு 8 மணி | திண்டுக்கல்<br>திருவெறும்பூர்<br>திருச்சி மேற்கு | திண்டுக்கல்<br>திருவெறும்பூர்<br>திருச்சி மேற்கு | **அய்.பி.செந்தில்குமார்,** திமுக<br>**அன்பில்.மகேஸ்பொய்யாமொழி,** திமுக<br>**கே.என்.நேரு,** திமுக |
| 10.04.2026 – வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஜெயங்கொண்டம்<br>குன்னம் | ஜெயங்கொண்டம்<br>குன்னம் | **க.சொ.க.கண்ணன்,** திமுக<br>**சா.சி.சிவசங்கர்,** திமுக |
| 11.04.2026 – சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கிணத்துக்கடவு<br>சூலூர் | கிணத்துக்கடவு<br>சூலூர் | **கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன்,** திமுக<br>**தளபதி முருகேசன்,** திமுக |
| 12.04.2026 – ஞாயிறு | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கோபிசெட்டிபாளையம்<br>அந்தியூர் | கோபிசெட்டிபாளையம்<br>அந்தியூர் | **என்.நல்லசிவம்,** திமுக<br>**எம். சிவபாலன்,** திமுக |
| 13.04.2026 – திங்கள் | காலை – 9 மணி<br>மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சேலம் வடக்கு<br>பாப்பிரெட்டிபட்டி<br>பாலக்கோடு | சேலம் வடக்கு<br>பொம்மிடி<br>பாலக்கோடு | **இரா.இராஜேந்திரன்,** திமுக<br>**முனைவர் பெ.பழனியப்பன்,** திமுக<br>**டாக்டர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,** திமுக |
| 14.04.2026 – செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஓசூர்<br>பர்கூர் | ஓசூர்<br>பர்கூர் | **எஸ்.ஏ.சத்யா,** திமுக<br>**கே.மதியழகன்,** திமுக |
| 15.04.2026 – புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | விருகம்பாக்கம்<br>சைதாப்பேட்டை | விருகம்பாக்கம்<br>சைதாப்பேட்டை | **பிரபாகர் ராஜா,** திமுக<br>**மா.சுப்பிரமணியன்,** திமுக |
| 16.04.2026 –வியாழன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | செஞ்சி<br>திருவண்ணாமலை | செஞ்சி<br>திருவண்ணாமலை | **கே.எஸ்.மஸ்தான்,** திமுக<br>**எ.வ.வேலு,** திமுக |
| 17.04.2026 - வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | நெய்வேலி<br>குறிஞ்சிப்பாடி | நெய்வேலி ஆர்ச் கேட்<br>குறிஞ்சிப்பாடி | **சபா.இராஜேந்திரன்,** திமுக<br>**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,** திமுக |
| 18.04.2026 – சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சிதம்பரம்<br>சீர்காழி | சிதம்பரம்<br>சீர்காழி | **தமிமுன் அன்சாரி,** ம.ஜ.க<br>**செந்தில்செல்வன்,** மதிமுக |
| 19.04.2026 – ஞாயிறு | காலை 9 மணி<br>மாலை 6 மணி<br>இரவு 8 மணி | வேதாரண்யம்<br>நாகப்பட்டினம்<br>நன்னிலம் | வேதாரண்யம்<br>நாகப்பட்டினம்<br>நன்னிலம் | **மா.மீ.புகழேந்தி,** திமுக<br>**பேராசிரியர் எம்.ஹெச். ஜவாஹிருல்லா,** மமக<br>**முஹம்மது முபாரக்** எஸ்.டி.பி.அய். |
| 20.04.2026 – திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | மன்னார்குடி<br>ஒரத்தநாடு | நீடாமங்கலம்<br>ஒரத்தநாடு | **டி.ஆர்.பி.ராஜா,** திமுக<br>**ஆர்.வைத்திலிங்கம்,** திமுக |
| 21.04.2026 – செவ்வாய் | காலை 9 மணி<br>மாலை 4 மணி | பாபநாசம்<br>தஞ்சாவூர் | கபிஸ்தலம்<br>தஞ்சாவூர் | **எ.எம்.ஷாஜகான்,** (இ.யூ.மு.லீ<br>**சண்.இராமநாதன்,** திமுக |

**கலி.பூங்குன்றன்**
துணைத் தலைவர், திராவிடர் கழகம்

# செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் வேட்புமனு தாக்கல்!

## மாவட்டச் செயலாளர் – வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!


செஞ்சி, ஏப். 6 -

செஞ்சி சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் இன்று 6 ஆம்தேதி வேட்பு மனு தாக்கல் செய்கிறார். திமுகவேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ அழைப்பு.

இது குறித்து அவரது அறிக்கையில்கூறுகையில்

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின்,துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆசியுடன்எ திர்வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ள சட்ட மன்றத் தேர்தலில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளராக விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ போட்டியிடுகிறார்.

செஞ்சி தொகுதியில் திமுக சார்பில் போட்டியி



டும் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ

இன்று 6 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்கிறார்.

இதையடுத்து அன்று செஞ்சி சிங்கவரம் சாலை புனித மிக்கேல் பள்ளி எதிரி இருந்துஊர்வலமாக சென்று செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது இந்நிகழ்ச்சியில் மதச் சார்பற்றமுற்போக்குகூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூராட்சி செயலாளர்கள்,

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற நிர்வாகி கள்கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின்

# கழக வேட்பாளர் க.சுந்தர் வாக்குச் சேகரிப்பு சுற்றுப்பயண விவரம்!

| நாள் | மாநகரம், ஒன்றியம், பேரூர் |
|---|---|
| 08.04.2026 | வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம், |
| 09.04.2026 | காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் |
| 10.04.2026 | உத்திரமேரூர் ஒன்றியம் |
| 11.04.2026 | சாலவாக்கம் ஒன்றியம் |
| 12.04.2026 | காஞ்சிபுரம் மாநகரம்,<br>வாலாஜாபாத் பேரூர் |




**உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள்.**

# செய்யறிவு உலகில் செம்மொழி - எண்ணம் ஈடேறட்டும்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

செய்யறிவு
மனித குல வரலாற்றில்
மற்றுமொரு நெருப்பு!
புதிய மின்சாரம்!
ஏவுகணைத் தாக்குதல்களில்
வானத்தில் தீபாவளி!
கடல்களில் புஸ்வாணம்!
முன்பு, உடல் உழைப்புக்கு
மாற்றாகக்
உழைப்புக்கு
கண்டுபிடித்தார்கள்
எந்திரங்களை!
உதவிக்கு வந்த எந்திரங்கள்
இருக்கின்றன
மனிதர்களின் கட்டுப்பாட்டில்!
இப்போது,
தமக்குப் பதிலாக
சிந்திப்பதற்கும்
முடிவெடுக்கவும்
கற்றுக் கொடுத்துவிட்டார்கள்!
ஆகவே,
செய்யறிவின் கட்டுப்பாட்டில்
வந்து கொண்டிருக்கிறார்கள்
மனிதர்கள்!
செய்யறிவு உலகில்
இதோ நமக்குத் தேர்தல் காலம்!
வழக்கமாக வாக்குகளைக் கவர
அரசியல் கட்சிகளின்
வாக்குறுதிகளைத் தாண்டி
வந்திருக்கிறது
செய்யறிவுக் காலத்தை
எதிர்கொள்ளும் வகையில்
தமிழ்நாடு முதல்வர்
தந்திருக்கிற தேர்தல் அறிக்கை!
தேர்தல் காலம் -
சாதி, மதங்கள்
கட்சிகளின் பெயரில்
அவதாரம் எடுக்கும் காலம்!
அவதாரங்களோடு,
கொள்கைகளின் வழிகாட்டலில்
இலக்கு நோக்கிய
பயணமாகத் தேர்தல் அறிக்கை!
பொதுவாக, எல்லாக் கட்சிகளும்
தேர்தலுக்குப் பின்
மக்கள் நலனுக்குச்
செய்யப் போகிற
பணிகளின் பட்டியலாக வரும்
தேர்தல் அறிக்கைகள்!
தேர்தல் அறிக்கைகள்
வரலாற்று ஆவணங்கள்!
ஆம்!
தேர்தல் நடந்த காலத்தில்
மக்களின் ஆசைகள்-
அரசியல் கட்சிகள்
மக்களிடம் விதைத்த ஆசைகள் என்றும்
வரலாறு பதிவு செய்யும்.
எந்தெந்தக் கட்சிகள்
வாக்குகளைப் பெற
எப்படி முயன்றன என்பதற்கான
ஆவணப் பதிவுகளாக வரும்
தேர்தல் அறிக்கைகள்!
ஆனால்,
மக்கள் நலன் மட்டுமின்றி,
மொழி, பண்பாடு குறித்த
கவலைகளோடும்,
தீர்வுக்கான சிந்தனைகளோடும்
வெளிவந்திருக்கிறது
தி.மு.க. தேர்தல் அறிக்கை!
ஆட்சிமொழியாக
ஆங்கிலம் எப்போதும் நீடிக்க,
அட்டவணை எட்டில் இடம்பெறும்
மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்க, உயர்நீதி மன்றத்தில்
வழக்காடும் மொழியாக்க,
நாட்டுப்புறக் கலை,
வாழ்வியல் மரபுகள்,
கட்டடக்கலை, தொல்லியல்,
இலக்கியத் தரவுகளை இணைத்து
ஒருங்கிணைந்த
பண்பாட்டு ஆணையம் அமைக்க,
பண்பாட்டு நிகழ்வுகளை
ஆவணப்படுத்த,




தமிழ்மொழியைக் கற்றுத்தர
தமிழ் ஆய்வகங்கள் அமைக்க,
தமிழ்நாட்டுக் கல்வெட்டுப்
பெரும் களஞ்சியங்களை உருவாக்க,
சங்கத் தமிழ் முதல்
கணினித் தமிழ் வரையிலான
தமிழ் வளர்ச்சிக்குத்
தரவுக் களஞ்சியங்களை உருவாக்க,
தமிழ் மொழிக்கான
செய்யறிவு மென்பொருளை உருவாக்க
நிதி நல்கை வழங்க - என்று
தமிழ், வரலாறு,
பண்பாடு தொடர்பாக
செய்யறிவு காலத்திற்கேற்ப
தொலைநோக்குப் பயணத்திற்குப்
பாதை அமைக்கச்
செம்மொழி மாநாடு
சென்னையில் நடத்த
திட்டங்களைச் சொல்கிறது
தி.மு.க. தேர்தல் அறிக்கை!
செய்யறிவைக் கொண்டு
மனிதத்தைக் காப்பாற்ற,
மனிதத் திறனை மேம்படுத்தத்
திட்டம் தந்திருக்கிறார்.
தமிழ்நாடு முதல்வர்!
அறிவு மட்டும் கொண்டு
வாழ முடியாது என்று
திருவள்ளுவர் சொல்கிறார்:
‘அறிவினான் ஆகுவது உண்டோ?
பிறிதின் நோய் தம் நோய் போல்
போற்றாக் கடை.’
மற்ற உயிரின் துன்பத்தைத்
தன் துன்பம் போல் கருத
செய்யறிவுக்குக்
கற்றுக் கொடுக்க வேண்டும்.
இப்படி கற்றுக் கொடுக்க
ஏராளம் இருக்கின்றன
தமிழில்!
தமிழ்-
வெறும் சொல்லாடலுக்கான
கருவி மட்டுமில்லை;
மானுட வரலாற்றுச் சிந்தனைகளையும்
மானுட நேயத்தையும்
ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக
தொடர்ந்து வளர்த்துவரும்
பெரும் கடல்!
இப்படி,
செம்மொழித் தமிழின்
சிந்தனைகள்
செய்யறிவு உலகிற்கும்
தேவைப்படுவதை வெளிப்படுத்த,
செய்யறிவு உலகில்
செம்மொழி மாநாடு நடத்த
திட்டமிட்டிருக்கிற
முதல்வரின்
எண்ணம் ஈடேறட்டும்!



ம.ரா.

**-நன்றி**
**‘கணையாழி’**
**ஏப்ரல் - 2026**